International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

திருக்குறளில் பொதுநிர்வாகக் கோட்பாடுகள்

முனைவர் வெ. மலர்விழி
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீவித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தன்னாட்சி
காட்டேரி ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி 636902

ஆய்வுச் சுருக்கம்

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் மனித வாழ்வின் அறநெறிகளையும் அரசியல் மற்றும் நிர்வாகச் சிந்தனைகளையும் எடுத்துரைக்கும் சிறந்த வாழ்வியல் நூலாகத் திகழ்கிறது. இவ்வாய்வு, திருக்குறளில் இடம்பெற்றுள்ள நிர்வாகக் கருத்துகளைப் பொதுநிர்வாகத்தின் அடிப்படைக் கூறுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, அரசின் செயல்பாடுகள், பணியாளர் தேர்வு, பொறுப்புகளை ஒப்படைத்தல், திட்டமிடல், ஒருங்கிணைப்பு, தகவல்களை அறிதல், வருவாய் ஈட்டுதல் மற்றும் நிதி மேலாண்மை ஆகிய நிர்வாகக் கூறுகள் திருக்குறளின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன. இதனுடன், நாலடியார், நீதிநெறி விளக்கம், நான்மணிக்கடிகை, திரிகடுகம் போன்ற நீதி இலக்கியங்களில் இடம்பெறும் கருத்துகளும் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றன. தகுதியறிந்து பணிகளை ஒப்படைத்தல், செயல்களை முன்கூட்டியே திட்டமிடுதல், கிடைக்கும் தகவல்களின் உண்மைத்தன்மையை ஆராய்தல், அரசின் பொருளாதாரவளங்களைப் பாதுகாத்தல் மற்றும் மக்களின் நலனை முன்னிறுத்துதல் போன்ற நிர்வாகக் கூறுகளைத் திருக்குறள் வலியுறுத்துவதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. மேலும், அறம் சார்ந்த ஆட்சிமுறை மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய நிர்வாகத்தின் முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது. இதன் வழியாக, திருக்குறளில் பொதிந்துள்ள நிர்வாகச் சிந்தனைகள் தற்காலப் பொதுநிர்வாக அணுகுமுறைகளுடன் கொண்டுள்ள தொடர்பை விளக்குவதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

முதன்மைச் சொற்கள்: திருக்குறள், நிர்வாகம், பொதுநிர்வாகம், திட்டமிடல், ஒருங்கிணைப்பு, நிதி மேலாண்மை.

முன்னுரை

சங்கம் மருவிய காலத்தைச் சார்ந்த திருக்குறளை அறிமுகம் செய்யும் வகையிலும் தற்காலக் கோட்பாடுகளுல் ஒன்றான நிர்வாகவியல் சொல்நெறிகளை விளக்கும் வகையில் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதி முதல் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை, தமிழகத்தில் ஆட்சி புரிந்த பல்லவர்களின் ஆட்சிக் காலத்தைச் 'சங்கம் மருவிய காலம்' எனலாம். இக்காலக் கட்டத்தில் சோழநாட்டையும் பாண்டிய நாட்டையும் களப்பிரர்களும் நடுநாட்டையும் தொண்டை நாட்டையும் பல்லவர்களும் பிராகிருத மொழியையும் ஆட்சி

மொழியாகக் கொண்டிருந்தனர். ஆதலால், தமிழ் மக்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாட்டுக் கூறுகள் போன்றவற்றின் வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டது. ஆகவே, இவர்களின் காலப்பகுதியை தமிழ் இலக்கிய வரலாற்றில் 'இருண்ட காலம்' என்கிறோம்.

இவ்விருண்டகாலப் பகுதியில் பழந்தமிழரின் அகப்புற ஒழுக்கலாறுகள் பேணப்படாது புறந்தள்ளப்பட்டன. அதனால், அக மரபும் புற மரபும் சங்க இலக்கியத்தில் கோலோச்சி யிருந்த நிலை மாறியது. குழப்பமான அச் சூழலில் நீதியும் அறமும் தேவைப்பட்டன. இதனை வாய்ப்பாக கருதிய பௌத்த-சமண சமயத்தவர்கள் தம் சமய ஒழுகலாறுகளை நீதியாகவும் அறமாகவும் மக்களிடம் இலக்கியங்கள் வழியாக பரப்பினர். அதனால் இருண்ட காலத்தை "நீதி இலக்கிய காலம்" என அழைக்கப்பட்டது

கீழ்க்கணக்கு நூல்கள்

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதி நூல்களை வகைப்படுத்தி அவற்றை 'கீழ்க்கணக்கு நூல்கள்' என்று சிறப்பித்தனர்

அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு னின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்

என்கிறது பன்னிரு பாட்டில்

கீழ்க்கணக்கு என்பது அடிவரையறையில் குறைந்து பெரும்பாலும் வெண்பாவினாலும், வெண்பா வகை பாக்களினாலும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருட்களை பாடுவதாகும்.

நாலடி நான்மணி நாநாற்பது ஐந்திணை மூப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலமும்
இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைநிலைய வாம்கீழ்க் கணக்கு

கீழ்க்கணக்கு நூல்கள் 18 என்கிறது வெண்பா. பதினொரு நூல்கள் அறநூல்கள், ஆறு நூல்கள் அகப்பொருள் நூல்கள், ஒரு நூல் மட்டும் புறப்பொருள் நூலாகும்.

திருக்குறளில் நிர்வாகம்

திருவள்ளுவர் காலத்தில் 'நிர்வாகம்' என்ற சொல் ஆளப் பெறவில்லை. ஆனால் அச்சொல் உணர்த்தும் பொருண்மைகள் அக்காலத்திற்கும் முன்பிருந்தே வாழ்வியல் நடைமுறையில் இருந்திருக்கலாம். அதனைத் திருவள்ளுவர் "ஆள்வினை உடமை, ஊக்கம் உடைமை, மடியின்மை, இடுக்கண், அழியாமை குடிசெயல்வகை, வினைத்திட்டம், வினை செயல்வகை, வினைத்தூய்மை, தெரிந்து செய்வகை" போன்ற அதிகாரங்கள் நிர்வாகம் குறித்து விவரிக்கின்றன.

ஒருவர் தன்னைத்தானே நிர்வகிக்க கற்றுக் கொண்டால்தான், அவரால் பிறரை அல்லது ஒரு குழுவை திறம்பட நிர்வகிக்க இயலும். தன்னைத்தானே நிர்வகித்துக் கொள்ள நேர்மை, சிறந்த அறிவு, பொறுமை, தளராத முயற்சி, ஈகை, சோர்வின்மை, மன உறுதி, செயலாற்றும் திறமை போன்றவை அவசிய மாகும். இதைகுறித்து வள்ளுவம் விளக்குகிறது.

நாலடியார், ஆசாரக்கோவை, இன்னா நாற்பது, முதுமொழிக்காஞ்சி, கொன்றை வேந்தன், நன்னெறி, நீதிநெறி விளக்கம், வெற்றி வேற்கை, உலகநீதி போன்ற நீதி இலக்கிய நூல்களிலும் சுட்டப்பெற்றுள்ளன.

திருக்குறளின் அரசு, அரசாங்க நிர்வாக முறைகள்

வள்ளுவர் அரசியல் பற்றிய கருத்துக்களைப் பொருட்பாலில் 'அரசியல்' எனும் பிரிவில் 25 அதிகாரங்களிலும், 'அங்கஇயல்' எனும் தலைப்பில் 32 அதிகாரங்களிலும் விரிவாக விளக்கியுள்ளார்.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு (குறள்-544)

குடிமக்களை அன்போடு நடத்தி நீதி முறை தவறாமல் அரசாலும் மன்னனை உலகம் போற்றும் என்கிறார்.

எந் நெறியானும் இறைவன்தன் மக்களைச்
செந் நெறிமேல் நிற்பச் செயல் வேண்டும், அந்நெறி
மான் சேர்ந்த நோக்கினாய்-ஆங்க அணங்க ஆகும்
தான் செய்த பாவை தனக்கு. (க.ப. அறவாணன், அற இலக்கிய களஞ்சியம் ப.746)

அரசன் தன் கீழ் வாழும் குடிமக்களை நல்ல நெறிகளைப் பின்பற்றும் நற்குடி மக்கள்

ஆக்குதல் வேண்டும் என்கிறார்.

திருக்குறளில் குடியரசு ஆட்சியைப் பற்றி எக்குறிப்பும் இல்லை என அறியப்பட்டது. குடியரசு போன்றதொரு அமைப்பின் தீமை பற்றி நாடு, உட்பகை ஆகிய இரண்டு அதிகாரங்களில் கூறியுள்ளார்.

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்

கொல்குறும்பும் இல்லது நாடு (குறள்-735)

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து

மட்பகையின் மாணத் தெறும் (குறள்-883)

தன்னைச் சுற்றி தனக்கு வேண்டியவர் போலிருந்து துன்பந் தரும் தீயோரிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

புறம் நட்டு அகம் வேர்ப்பார் நச்சுப் பகைமை

வெளியிட்டு, வேறாதல் வேண்டும், கழி பெருங்

கண்ணோட்டம் செய்யார் கருவி இட்டு ஆற்றுவார்

புண் வைத்து மூடார் பொதிந்து. (க. ப. அறவாணன், அற இலக்கிய களஞ்சியம் ப.763)

வெளியே சிரித்துக்கொண்டு உள்ளத்தில் புழுங்குவோருடைய நஞ்சை ஒத்தப் பகைமையைக் கண்டறிந்து வெளிப்படையாகப் புலப்படுத்தி வஞ்சகரிடமிருந்து பிரிந்து விடுதல் வேண்டும் என்கிறார். மாற்றுக் கருத்துடைய பல்வேறுக் கட்சியின ருடைய கூட்டம் நிறைந்தக் குடியாட்சி நன்மை பயக்காது என்றக் கருத்தை நீதிநூல்கள் முன் வைக்கின்றன. வள்ளுவம் பல்வேறு கட்சிகள் அமைத்து நடத்தப் பெறும் குடியரசு ஆட்சி முறையை விரும்ப வில்லை எனலாம்.

அரசியல் எனும் பிரிவில் 25 அதிகாரங்களில் குறிப்பாக 39ஆவது அதிகாரம் தொடங்கி 64ஆவது அதிகாரம் வரை 250 குறட்பாக்களிலும் 'அங்க இயல்' எனும் பிரிவில் 32 அதிகாரங்களில் குறிப்பாக 64 ஆவது அதிகாரம் தொடங்கி 95 ஆவது அதிகாரம் வரை 320 குறட்பாக்களிலும் எவ்விடத்திலும் தந்தை, மகன் மற்றும் அரசன், இளவரசன் என்ற சொற்கள் இடம் பெறவில்லை.

தந்தை மகன் பற்றி "தந்தை மகற்காற்றும் உதவி" என்றும் மகன் தந்தையை காற்றும் உதவி மகன் தாய் உறவைத் "தன் மகனைச் சான்றோர் எனக் கேட்ட தாய்" என்றும் ஈன்றான் மகன் என்பதை "ஈன்றான் பசி காண்பானாயினும்" என்றும் ஈன்றான் முகத்தேயும் இன்னாதல்" என்றும் பெற்றோர் பிள்ளைகள் உறவை சுட்டிக்காட்டி உள்ள வள்ளுவர் தந்தைக்குப் பின் மகன் என்றோ, மகள் என்றோ, பெயரன் அல்லது பெயர்த்தி என்றோ, கணவனுக்குப் பின் மனைவி, மனைவிக்கு பின் கணவன் என்றோ வாரிசு அரசை எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை எனலாம்.

அரசர் தலைமைக்குத் திருவள்ளுவர் ஆடவரை மட்டுமே கருதினார். பெண்களை அரசு தலைமைக்குத் கருதவில்லை. இறைவன், மன்னவன், காவலன் என்று அவர் ஆண்பால் ஈற்றல் மட்டுமே நாட்டு தலைமை வகிப்பவரைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஆளுவோர் பெண் கூறுவதைக் கேட்டு ஆட்சி புரிதலாகாது" எனும் கருத்தில் 'பெண் வழிச்சேறல்' எனும் தனி அதிகாரத்தை வள்ளுவர் வகுத்து இருப்பது சிந்திக்கத் தக்கது.

பெண்ணேவல் செய்தொழுகுதல் ஆண்மை என்றும் பெண்ணேவல் செய்வார் என்றும் கூறி பெண் வழிச் செயல் படுவோரை கண்டித்துள்ளார். பெண்மையை அரசுக்கும் வாரிசுரிமை அரசான முடியாட்சிக்கும் எதிரானவர் எனலாம்.

குடியாட்சியையும் முடியாட்சியையும் புறக் கணிக்கும் வள்ளுவர் வலியுறுத்தும் புதிய ஆட்சி முறை 'அறவோர் அரசாட்சி முறை' ஆகும்.

அரசியல் கோட்பாட்டில் கற்றவர், அறிஞர், சுற்றத்தார், அமைச்சர், படைஞர், நண்பர், சான்றோர், பண்பாளர், பெரியார், சிறப்பித்து உள்ளார். செருக்கு, சினம், காமம், கஞ்சத் தனம், மானம், அளவிருந்த உவகை எனும் ஆறு தீநெறி விலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறியுடையாரைத் துணை கொள்ள வேண்டும் என்றும் அவரை அவமதிக்காமல் அனைத்து ஒழுக வேண்டும். 'பெரியாரைத் துணைக் கோடல்' எனும் அதிகாரத்திலும் 'பெரியாரைப் பிழையாமை' எனும் அதிகாரத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசு பணியாளர்களைக் கொண்டே அரசு

நிர்வாகம் திறம்பட செயலாற்றுகிறது. அத்திறமிக்க அரசு பணியாளர்களுக்கு அன்பு, அறிவு, தோற்றம் ஆகிய தகுதிகள் உள்ள என்பதோடு கல்வி, அறிவு இரண்டையும் இணைத்துக் கொள்ளச் சொல்கிறார். கல்வியை கற்று தெரியவும் அறிவைப் பொது அறிவு என்றும் சிறப்பிக்கிறார்.

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் (குறள்-504)

ஒருவரின் குணத்தை நன்கறிந்து பணியில் அமர்த்த வேண்டும் என்கிறது வள்ளுவம்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் (குறள்-517)

ஒருவரின் தனித்துவ திறனை ஆய்ந்தறிந்து அவருக்குத் தகுந்த பணியினை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

உற்றான் உறாஅன் எனல் வேண்டா ஒன்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக- கற்றான்
கிழவன் உரைகேட்கும் (க.ப.அறவாணன், அற இலக்கிய களஞ்சியம் ப.794)

பணியாளர்களுக்குப் பணியை ஒதுக்கீடு செய்வதையும் அவர்களை அப்பணிகளுக்குப் பொறுப்பு ஏற்க வைக்கும் நிலையையும் பணியில் கடமை, பொறுப்பும் ஒன்றாகவே செல்ல வேண்டும் என்ற நிர்வாக செயலை வள்ளுவம் வலியுறுத்துகிறது.

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியன் ஆகச் செயல் (குறள்-518)

பொது நிர்வாக முறைகளை கூறும் குறட்பாக்கள்

நிர்ணயித்த இலக்கினை அடைவதற்காகச் செய்யப்படும் அனைத்து செயல்களும் பொது நிர்வாகத்தினுள் அடங்கும். பொதுக் கொள்கையும் நிர்வகிக்கப்படும் ஒவ்வொரு செயல்பாடும் பொது நிர்வாகத்தின் பரப்புக்கு உட்படும். மக்களுக்குச் சேவை செய்தல், திட்டமிடுதல், அமைப்பு, பணியாளர்கள், வழி காட்டல், ஒருங்கிணைப்பு, அறிக்கை, வரவு-செலவு, அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்தல் போன்று வகுக்கலாம்

திட்டமிடல்

நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைய என்ன செய்ய வேண்டும் அதனை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை முன்னரே மனதில் ஏட்டில் எழுதுதல் வேண்டும். அதுவே திட்டமிடல் ஆகும்.

வள்ளுவர் 'அங்க இயல்' பகுதியில் வினைத் தூய்மை, வினைத்திட்டம், வினைச் செயல் வகை ஆகிய மூன்று அதிகாரங்களில் திட்ட மிடுதலுக்கான நுட்பங்களைச் சுட்டியுள்ளார்.

பொருன்கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்
இருள்தீர எண்ணி செயல். (குறள்-675)

தேவைப்படும் பொருள், ஏற்ற கருவி ,தகுந்த காலம், செய்யத் தகுந்த செயல் அதற்கான இடம் ஆகிய ஐந்திணையும் தீர ஆலோசித்து பின்னரே காரியங்களைச் செய்ய வேண்டும்.

நல்லவை செய்யத் தொடங்கினும், நோனாமே
அல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கும்
எல்லிவியனெறிச் செல்வாரை யாரலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல்
(நீதிநெறி விளக்கம் பா-91)

ஒவ்வொரு செயலையும் ஒருவர் மேற் கொள்ளும் போது முறையான மேற்திட்டத் தையும் உரியதுணையையும் தேடிக்கொண்ட பின்பே செய்ய வேண்டுமென இக்கருத்து வெளிப்படுத்துகிறது.

பின்னவாம், பின் அதிர்க்கும் செய்வினை என் பெரினும்
முன்னவாம் முன்னம் அறிந்தார்கட்கு என்னும்
அவ ஆம், அடைந்தார்கட்கு உள்ளம் தவாவாம்
அவா இல்லார் செய்யும் வினை
(நான்மணிக்கடிகை பா-66)

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறை காக்கும் முட்டாச் செயின்.
(குறள்-547)

என்கிறது அமைப்பு குறித்து வள்ளுவம்.

"ஒற்றிற் றெரியாச் சிறைப்புறத்தோர்துமெனப்
போற்றோ டுணையாத் தெரிதந்தும் குற்றம்

அறிவரிதென் றஞ்சுவதே செங்கோண்மை சென்று

முறையிடினும்ங் கேளாமை யன்று
(நீதிநெறி விளக்கம் பா-31)

மறம் மானம் மாண்ட வழிச்செலவு தோற்றம் என நான்கே ஏமம் படைக்கும் (குறள்-766)

படைவீரர் வெற்றியைக் காட்டுகிறது.

ஒருங்கிணைப்பு

நிர்வாகத்தின் பல்வேறு நிலைகளின் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதே 'ஒருங் கிணைப்பு' ஆகும். ஓர் அரசர் திறம்பட நாட்டை ஆளுவதற்கு அவருக்கு கீழ் உள்ள பல்வேறு நிலையிலான நிர்வாக உறவுகளை ஒருங்கிணைத்துக் கொள்வது இன்றி அமையாது.

அரசருக்குரிய தலையாய செல்வங்கள் பற்றி,

படைகுடி கூழ்அமைச்சர் நட்பரசண் ஆறும் உடையான் அரசருள் ஏறு. (குறள்-381)

என்ற குறட்பாவில் குறிப்பிட்டுள்ளார். இக்குறட்பாவில் சுட்டப்பட்டுள்ள வலிமை மிக்கப்படை வரிசை நல்லொழுக்கம் மிக்க குடிமக்கள், திரளான பொருள் வளம், திறமையான மந்திரிகள், அண்டை நாட்டரசன் நட்பு, நல்ல பாதுகாவல், ஆகிய ஆறும் அரசருக்கு இன்றியமையாதவை. இவற்றை ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்தி ஒருங்கிணைத்தாள் அவ்வரசு நிலைத்து நிற்கும்.

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்

உடையானாம் வேந்தர்க் கொளி (குறள்-390)

இல்லையென்று வருவோர்க்கு தருவதும் அன்பு செலுத்துவதும் ஆட்சி முறை வழுவாதிருப்பதும் குடிமக்களைப் பாதுகாத்த லும் ஆகிய நான்கு குணமும் உடையவரே அரசரில் சிறந்த அரசர் என்கின்றது வள்ளுவம்.

ஆட்சிக்குட்பட்ட நிர்வாக செயல்பாடுகளுக்குள் தொடர்பு வலுப்பட்டு இருந்தால் தான் ஒருங்கிணைப்புச் சிறக்கும். ஒருங்கமைந்த நிர்வாகத்தால் தான் நிலையான ஆட்சியை உருவாக்க இயலும்.

அரசர் தன் நிர்வாகத்திற்குட்பட்டோரைத் தன் அன்பான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பதைத்

கோல் அஞ்சி வாழும் குடியும் குடிதலிஇ ஆலம் வீழ் போலும் அமைச்சனும் வேலின் கடை மணி போல் திண்ணியான் காப்பும்,- இம்மூன்றும்

படைவேந்தன் பற்று விடல்!.... (திரிகடுகம் பா-33)

அறிக்கை

நிர்வாகம் யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறதோ, அவர்களுக்கெல்லாம் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அவ்வப்போது தெரிவிப்பதை அறிக்கை எனலாம்.

அரசர் தான் நாட்டினுள் நிகழ்பவற்றையும் தன் நாட்டிற்கு வெளியே நிகழ்பவற்றையும் ஒற்றர் வழியாக அறிந்துகொள்வர். தான் நிர்வாகத்திற்கு உட்பட்டுள்ள பணியாளர் களின் செயல்பாடுகளை அமைச்சர்கள் வழியாக தெரிந்துகொள்வர். தேவைப்படின், அரசர் தாமே நேரில் சென்று களப்பணி புரிந்து அறிவதும் மாறுவேடம் பூண்டு கண்காணிப்பதும் உண்டு. 'அறிக்கை' பெரும் பாலும் செவி வழியாகவே பெறப்பட்டது. தேவை கருதிமட்டும் எழுத்துவழியாகப் பெறப்பட்டது.

இத்தகைய அறிக்கை குறித்த குறிப்பு திருக்குறளில் இல்லை. ஆனால் அவ்வறிக்கையின் மீதான அரசரின் மேல் நடவடிக்கைகளுக்கு முன் அரசர் செய்ய வேண்டியன விழிப்புடன் செயல்பட வேண்டியன குறித்த குறிப்புகள் திருக்குறளில் உள்ளன.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தரிவு (குறள்-423)

அரசியல் ஒரு சூதாட்டக் களம், சதிகளின் சதுரங்கம், சாணக்கியத்தின் தலைவிரிப்பைக் காணும் அரங்கம். சிறிதே ஏமாறினால் பேரிழப்பைச் சந்திக்க வேண்டும். ஆதலால் அரசர் இவற்றை உணர்ந்து கொண்டு , முறியடிப்பதற்கு என்றே உளவாளிகளை அமர்த்தியிருப்பார். அவர்கள் கொண்டு வரும் செய்திகளை அவை யார் சொன்னவையாக இருந்தாலும் அவற்றை அரசர் ஆராய்ந்து உண்மையை அறிய வேண்டும். (சுப அண்ணாமலை திருக்குறள் சிந்தனை

பொருட்பா முதல் பகுதி பா-59)

என அறிக்கை மீது நுண்ணிய கவனத்தை அரசர் செலுத்த வேண்டும் என்று வள்ளுவர் எடுத்துரைப்பதாகக் கூறியுள்ளார்.

தன் நிலையும் தாழாத் தொழில் நிலையும்துப்பு எதிர்ந்தார்
இந்நிலையும் ஈடு இல் இயல் நிலையும் துன்னி
அளந்து அறிந்து செய்வான் அரசு அமைச்சன் யாதும்
பிளந்து அறியும் பேர் ஆற்றலான்.
(சிறுபஞ்சமூலம் பா-56)

தன்னுடய பொருளாதாரம் உட்பகை நிலைமை, நாட்டில் நடந்து வரும் தொழில் களின் நிலைமை, எதிரியின் நிலைமை, உலகியல் நிலைமை ஆகியவற்றை அளந்து அறிந்து செயல்படுபவரே அரசர்.

ஒன்றினான் ஒற்றிப் பொருள் தெரிதன் முன் இனிதே
முற்றான தெரிந்து முறை செய்தல் முன் இனிதே
பற்றினலாய்ப் பல்லுயிர்க்கும் பாத்தூற்றுப் பாங்களிதல்
வெற்வேறில் வேந்தர்க்கு இனிது.
(இனியவை நாற்பது-135)

வரவு-செலவு

வருவாய் என்பது அரசாங்கத்திற்கு வரி, சுங்கம், தீர்வை முதலியவற்றின் வழியாக வருவது. நாட்டு மக்களின் தொகை, தேவை இவற்றுக்கு ஏற்ப அரசிற்கு வருவாய் வர வேண்டும். ஆனால் வளத்திலிருந்து தான் வரவேண்டுமாதலால், வளங்களைச் சரியாகத் தெரிந்து, பயன்படுத்தும் வழியையும் தெரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்கு உழைப்பு மிகுதியாக இருந்தால், வளங்களை கூட மூலப்பொருளாக மாற்றலாம். மக்களின் வருவாயையும் மன்னரின் வருவாயையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு மன்னரயே சாரும். வரவு-செலவு திட்டத்தில் இடையில் உள்ள இந்தப் பாதுகாவல் தான் தலைமையானது. அரசுப்பணம் அதிகார வர்க்கத்திற்கு ஊதியம் முதலியவற்றைக் கொடுப்பதற்கே செலவாகி விடாமல் பார்ப்பதும் பாதுகாப்பதும் தான். அரசே தொழில்களை நடத்துவதும் பாதுகாப்பாகும்.

"**இயற்றலும் ஈத்தலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு** (குறள்-385)

பொருள் வரும் வழிகளை ஆராய்ந்து தோற்றுவித்து அவற்றை வளர்ப்பதும் வந்து சேர்ந்த பொருள்களைப் பாதுகாப்பதும் பாதுகாத்த பொருள்களைப் பயன்தர வகுத்த வழிகளில் செலவிடுவதும் அரசின் இயல்பாகும்.

குடி கொன்று முறை கொள்ளும் கோமற்குக் கற்றா
மடி கொன்று பால் கொளலும் மானபே குடி ஓம்பீக்
கொள்ளுமா கொள்வோற்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல
(நீதிநெறிவிளக்கம்-28)

குடிமக்களால் வரி செலுத்த முடியாதபடி வரி மேல் வரிவிதித்து வாட்டும் அரசுக்கு மொத்தமாகப் பாலைப் பெற்று பசுவைக் கொன்று வாழுதலும் இயலாக கூடியதே அரசன் அவ்வாறு செய்யாமல் மக்களால் இயன்றவற்றை பெற்று ஆட்சி செய்திகள் கருவூலம் நிறையும்.

ஆய்வின் முடிவுகள்

'திருக்குறளில் பொதுநிர்வாகக் கோட்பாடுகள்' என்னும் இவ்வாய்வின் வழியாக, திருக் குறளில் இடம்பெற்றுள்ள அரசியல் மற்றும் நிர்வாகச் சிந்தனைகள் தற்காலப் பொது நிர்வாகத்தின் அடிப்படைக் கூறுகளுடன் தொடர்புடையவை என்பது புலப்படுகிறது. குறிப்பாக, நிர்வாகச் செயல்பாடுகளில் திட்டமிடல், தகுதியறிந்து பணிகளை ஒப்படைத்தல், பணியாளர்களின் திறன்களை மதிப்பிடுதல், நிர்வாக அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், தகவல்களின் உண்மைத் தன்மையை ஆராய்தல் மற்றும் நிதி மேலாண்மையைச் சிறப்பாக மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைத் திருக்குறள் வலியுறுத்துகிறது.

மேலும், அரசின் வருவாயைப் பெருக்குவது டன், கிடைக்கும் பொருளாதார வளங்களைப் பாதுகாத்து முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்பதையும், குடிமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆட்சி நடத்த வேண்டும் என்பதையும் வள்ளுவர் எடுத்துரைக்கிறார். நிர்வாகத்தில் அறநெறி,

நேர்மை, அறிவுடைமை, பொறுப்புணர்வு மற்றும் தகுதியின் அடிப்படையிலான செயல்பாடு ஆகியவை இன்றியமையாதவை என்பதும் இவ்வாய்வின் மூலம் தெரிய வருகிறது. பிற நீதி இலக்கியங்களில் இடம்பெறும் நிர்வாகம் சார்ந்த கருத்துகளும் திருக்குறளின் சிந்தனைகளுக்கு விளக்கம ளிக்கும் வகையில் அமைந்துள்ளன. எனவே, திருக்குறளை அறநூலாக மட்டுமன்றி, நிர்வாகச் சிந்தனைகளை ஆராய்வதற்கான முக்கிய இலக்கிய மூலமாகவும் அணுக முடிகிறது. இருப்பினும், திருக்குறளின் கருத்துகளையும் தற்காலப் பொதுநிர்வாகக் கோட்பாடுகளையும் ஒப்பிடும் போது, அவற்றின் காலச்சூழல் மற்றும் கருத்தியல் வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு ஆராய்வது அவசியமாகும். அறத்தையும் மக்கள் நலனையும் அடிப்படையாகக் கொண்ட நிர்வாக அணுகுமுறையை உருவாக்குவதற்குத் திருக்குறளின் சிந்தனைகள் பயனுள்ள வழிகாட்டுதல்களை வழங்குகின்றன என்பதே இவ்வாய்வின் முதன்மையான முடிவாகும்.

ஆய்வின் தனித்துவப் பங்களிப்பு

திருக்குறளில் பொதுநிர்வாகக் கோட்பாடுகள் என்னும் இவ்வாய்வு, திருக்குறளில் இடம் பெற்றுள்ள அரசியல் மற்றும் நிர்வாகச் சிந்தனைகளைத் தற்காலப் பொதுநிர்வாகத் தின் அடிப்படைக்கூறுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதில் தனித்துவம் பெறுகிறது. குறிப்பாக, திட்டமிடல், பணியாளர் தேர்வு, பணிப் பொறுப்புகளை ஒப்படைத்தல், ஒருங்கிணைப்பு, தகவல்களின் உண்மைத் தன்மையை ஆராய்தல், வருவாய் மற்றும் செலவு மேலாண்மை ஆகிய நிர்வாகச் செயல்பாடுகளைத் திருக்குறளின் கருத்து களின் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்குவது இவ்வாய்வின் முக்கியப் பங்களிப்பாகும்.

மேலும், திருக்குறளில் இடம்பெறும் நிர்வாகக் கருத்துகளை நாலடியார், நீதிநெறி விளக்கம், நான்மணிக்கடிகை, திரிகடுகம் போன்ற பிற நீதி இலக்கியங்களின் கருத்துகளுடன் இணைத்து நோக்குவதன் மூலம், தமிழ் அற இலக்கியங்களில் பொதிந்துள்ள நிர்வாகச் சிந்தனைகளை ஒருங்கிணைத்து விளக்க இவ்வாய்வு முயல்கிறது. நிர்வாகத் திறனுக்கும் அறநெறிக்கும் இடையிலான தொடர்பு, தகுதியின் அடிப்படையில் பணி களை ஒப்படைத்தல், அரசின் பொருளாதார வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் குடி மக்களின் நலனை முன்னிறுத்துதல் ஆகிய கூறுகள் இவ்வாய்வில் சிறப்பாக எடுத்துரைக் கப்படுகின்றன. இதன் தனித்துவ மான பங்களிப்பாக, திருக்குறளின் நிர்வாகச் சிந்தனைகளை வெறும் அறக்கருத்துகளாக அணுகாமல், தற்காலப் பொதுநிர்வாகத்தில் பயன்படுத்தக்கூடிய கருத்தியல் வழிகாட்டுதல் களாக ஆராய்வதைக் குறிப்பிடலாம். இருப்பினும், இக்கருத்துகளின் தற்காலப் பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு நவீன நிர்வாகக் கோட்பாடுகளுடனான முறையான ஒப்பீட்டு ஆய்வுகள் மேலும் தேவைப் படுகின்றன. இவ்வகையில், தமிழ் இலக்கிய ஆய்வுக்கும் நிர்வாகவியல் ஆய்வுக்கும் இடையே கருத்தியல் தொடர்பை உருவாக்கு வதற்கான தொடக்கநிலைப் பங்களிப்பை இவ்வாய்வு வழங்குகிறது.

துணைநூற்பட்டியல்

முதன்மை நூல்கள்

* திருவள்ளுவர். திருக்குறள். பரிமேலழகர் உரை. சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2004.

துணை ஆய்வு நூல்கள்

* அண்ணாமலை, சுப. திருக்குறள் சிந்தனை: பொருட்பால் – முதல் பகுதி. வானதி பதிப்பகம், சென்னை
* இறையன்பு, வெ. இலக்கியத்தில் மேலாண்மை (Management in Literature). சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஜனவரி 2016.
* விஷ்ணுப்பிரியா, இரா. "திருக்குறளில் நிர்வாகவியல்." களஞ்சியம் – பன்னாட்டுத் தமிழாய்விதழ், தொகுதி 4, எண் 5, பிப்ரவரி 2026, பக். 645–656.

இணையவழி ஆதாரம்

* செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம். திருக்குறள் மற்றும் அதன் உரைகள் தொடர்பான நூலகப் பதிவுகள். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நூலகம்